**DEPOSITION OF WITNESS (Code of Civil Procedure)**

**IN THE COURT OF DISTRICT AND SESSIONS COURT,**

**COMMUNAL CLASH CASES, MADURAI**

**MCOP No. 1177/2018**

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி -1**

Name : கமலா

Father's Name :

Village :

Taluk :

Caste :

Religion :

Age :

Solemnly affirmed by Thiru. Palanivel, Grade I Bench Clerk of this court in accordance with the provision of Oaths Act of the day of 06.07.2023

**முதல் விசாரணை**

நான் எதிர்மனுதாரர் தரப்பு 1 ம் சாட்சியாவேன். இந்த வழக்கு சம்மந்தமாக விவரங்களை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகளை நேரில் அறிந்து கையெழுத்திட்டுள்ளேன். சம்பவ வரைபட நகல் **எ.ம.சா.ஆ.1** ஆகும், பாரதி என்ற விஜயபாரதிக்கு ஜெயராஜ் டிராக்டர் கம்பெனி வழங்கிய TN 59 W 9097 குரிய கிரைய ரசீது நகல் **எ.ம.சா.ஆ. 2** ஆகும், பாரதி என்ற விஜயபாரதி - கார்த்திகேயனுக்கு கிரையம் கொடுத்ததற்கான பட்டுவாடா ரசீது நகல் **எ.ம.சா.ஆ.3** ஆகும் , 1 ம் எதிர்மனுதாரர் TN59 W 9097 ஐ மாற்றிக்கொள்வதற்கு முன்னர் புதிய டிராக்டர் TN 59 BS 8677 முன் பண ரசீது ரூ.5,000/-க்கு உண்டான ரசீது நகல் **எ.ம.சா.ஆ.4** ஆகும்( எம.சா.ஆ 1 முதல் 4 ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது )

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து பற்றி நேரில் தெரியாது. TN 59 W 9097 டிராக்டர் வாகனத்திற்கு நான் தான் முதலில் உரிமையாளராக இருந்தேன். 17.01.2018 அன்று நான் மீண்டும் புதிதாக டிராக்டர் வாங்குவதற்காக 6 ம்

எதிர்மனுதாரர் நிறுவனத்தில் மேற்படி **TN** 59 **W** 9097 டிராக்டரை பரிமாற்றம் செய்து புதிதாக வேறு டிராக்டர் வாங்கினேன். மேறபடி **TN** 59 **W** 9097 டிராக்டரை ரூ.1,46,000/-க்கு அதே நிறுவனத்தில் கொடுத்துவிட்டு புதிதாக டிராக்டர் வாங்கினேன். அன்றைய தேதியிலேயே **TN** 59 **W** 9097 டிராக்டருக்கான பதிவுசான்று , ஆவணங்கள் ஒப்படைக்கப்பட்டதற்கான கடிதம் மற்றும் பெயர் மாற்றம் செய்வதற்கான அனுமதி கடிதம் ஆகியவற்றையும் ஒப்படைத்தேன். **TN** 59 **W** 9097 டிராக்டரை பாரதி என்பவர் கிரையம் பெற்றுள்ளார். எ.ம.சா.ஆ. 2 ல் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. அந்த கையொப்பம் 6 ம் நிறுவன மேலாளரின் கையொப்பம் ஆகும். என்னுடைய வாகனத்தை பெயர் மாற்றறம் செய்யாமலேயே 8 ம் எதிர்மனுதாரர்- பாரதி என்பவருக்கு விற்றுள்ளார். பாரதி என்பவர் யாரென்றே எனக்கு தெரியாது. 13.01.2018 ம் அன்று ரூ.50,000/- முன் பணம் செலுத்தி புதிதாக வாங்க இருக்கும் டிராக்டருக்கு பதிவு செய்திருந்தேன். தற்போது அந்த வாகனத்தின் உரிமையாளர் யாரென்று எனக்கு தெரியாது. கார்த்திகேயன் என்பவரிடம் மேற்படி வானகம் உள்ளது பற்றி தெரியாது. என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் இந்த வழக்கில் கூறப்பட்ட விபரங்களின் அடிப்படையில் அவ்வாறு குறிப்பிட்டுள்ளேன். விபத்து சமயத்தில் வாகனம் பெயர் மாற்றம் செய்யாமல் இந்தததன் காரணத்தினால் நான் தான் இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**3 முதல் 5 எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

வாகனம் வாங்கினாலோ விற்றாலோ அந்த விபரங்களை பதிவு செய்யப்பட்ட அதிகார வரம்பு கொண்ட வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியும். நான் மேற்படி வாகனத்தை 6 ம் எதிர்மனுதாரரிடம் பரிமாற்றம் செய்த விபரத்தை வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு தகவல்

தெரிவித்து விட்டேன். விபத்தில் ஈடுபட்ட வாகனம் பெயர் மாற்றம் செய்யப்பட்டதா இல்லையா என்று எனக்கு தெரியாது. பொதுவாக போக்குவரத்து காவல்துறையும், வட்டார போக்குவரத்து அலுவலர்களும் அவ்வப்போது வாகன தணிக்கை என்ற பெயரில் வாகனத்திற்கான ஆவணங்களை பரிசோதனை செய்வார்கள் என்றால் சரிதான். அவ்வப்போது விதிமீறல்களுக்கு அபராதமும் வசூலிப்பார்கள் என்றால் சரிதான்.